27th July 1965]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கனம் அங்கத்தினர் அவர்கள் நீண்டகால சட்டசபை உறுப்பினர். அவர்களுக்கு விதிகள் எல்லாம் நன்ருகத் தெரியும் என்று நினைக்கிறேன். வதந்திகளுக்கெல்லாம் மறுப்புக் கூறுவது சர்க்காருடைய பொறுப்பல்ல. சர்க்காருடைய பொறுப்பு அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு என்னென்ன முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதிலே தான் இருக்கிறது.

திரு. சி. பொன்னுசாமி: சேலத்திலிருந்து எதிர்ப்பார்க்கப்படும் இரும்பு இப்போது தேசத்தில் மற்ற பாகங்களில் கிடைக்கக்கூடிய இரும்பை விட உயர்ந்தது என்று சொல்லப்படுகிறது. குறைந்த சத்துள்ள இரும்போடு இதைக் கலக்க வேண்டியது மிக அவசியம் என்று சொல்லப்படுவது உண்மையா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இதைப் பற்றியெல்லாம் புத்தகத்தில் போட்டிருக்கிருர்கள். படித்தால் உபயோகமாக இருக்கும்.

திரு. சா. ராமசாமி நாயுடு: அங்கத்தினர்களுடைய இரும்பு மனதையெல்லாம் உருக்கிக் கொண்டே இருக்கும் சேலம் உருக்காலையானது அங்கத்தினர்களுடைய மனம் பூராவும் உருகுவதற்கு முன்னுல் உருக ஆரம்பிக்குமா? அதற்குச் சர்க்கார் என்ன உறுதி அளிக்கிறது?

(பதில் இல்லை)

திரு. மு. கருணாநிதி: மாநில அரசாங்கத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்ற கடிதப் போக்குவரத்து முழுவதையும் வெளியிட முடியாது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். எதிர்க்கட்சியினரைச் சமாளிக்க இங்கு பதில் சொன்னலும் அந்தக் கடிதங்கள் போராட்ட உணர்ச்சியோடு மாநில உணர்ச்சியோடு எழுதப்பட்டனவா? அந்த வகையில் எதிர்க்கட்சியினரின் ஒத்துழைப்பைப் பெறத் தயாராக இருக்கிருர்களா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: கேள்வியை மாற்றிப் போட்டால் ஏமாந்துவிடமாட்டோம்.

கனம் திரு. எம் பக்தவத்சலம்: கனம் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விரும்புவது சேலம் இரும்பு அல்ல; வேறு ஒன்று. அதற்கு நாங்கள் இடம் கொடுக்க மாட்டோம். சேலம் உருக்காலைத் திட்டம் நிச்சயமாகப் பெறப்படும், அதுவும் மத்திய சர்க்கார் மூலமாகவே பெறப்படும்.

ஹோல்ட்ஸ் ஓர்த் அணை

*5. **கேள்வி.—தி. பி. முருகையன்:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டைக்கு அருகாமையில் உள்ள 'ஹோல்ட்ஸ் ஓர்த் அணை எந்த எந்தக் கண்மாய்களுக்குத் தண்ணீர் விடும் நோக்கத்துடன் கட்டப்பட்டது?

(இ) அதன்படி எல்லா கண்மாய்களுக்கும் முறைப்படி தண்ணீர் விடப்படுகின்றனவா ?

கனம் திரு. வெ. ராமய்யா (அ) & (இ) : "ஹோல்ட்ட்ஸ் ஓர்த் அணைக்கட்டு" பின் வரும் கண்மாய்களுக்குத் தண்ணீர் விடும் நோக்கத்துடன் கட்டப்பட்டது :—

1. வெல்ல நாடு பெரிய குளம்	1,326.34	எக்காராக்கள்.
2. பழைய கண்மாய்	577.24	"
3. கொத்தமங்கலம் பெரிய கண்மாய்	247.09	,,

(இ) ஆம்.

திரு. பி. முருகையன் : கொத்தமங்கலம் பெரிய கண்மாய்க்கு இதன் மூலம் தண்ணீர் போகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். அந்த அணையின் மூலம் தற்போது தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமய்யா : இப்போது தண்ணீர் பாய்ந்து கொண்டுதான் இருக்கிறது.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : ஹோல்ட்ஸ் ஓர்த் அணைக்கட்டுக்குச் செலவான தொகை எவ்வளவு? எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

கனம் திரு. வெ. ராமைய்யா : அந்த அணைக்கட்டு கட்டி முடிந்து பல வருஷங்கள் ஆகிவிட்டன.

காரம்பக்குடி புதுக்குளம்

*6 கேள்வி.—**திரு. பி. முருகையன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அக்கினி ஆற்றிலிருந்து காரம்பக்குடி புதுக்குளத்திற்கு தண்ணீர் கொண்டுவர வாய்க்காலின் அகலம் சுமார் 120 அடி வேண்டுமென்று பொறியாளர் சர்வே செய்ததைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்று அவ்வூர் பொதுமக்களிடமிருந்து அண்மையில் மகஜர்கள் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் மேல் எடுக்கப்பட்ட முடிவுகள் என்ன ?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) & (இ) ஒரு மகஜர் வந்தது. ஆனுல் அக்கினி ஆற்றிலிருந்து கரம்பக்குடிப் புதுக்குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வரும் வாய்க்காலுக்கு 100 அடி அகலமான நிலந்தான் ஆர்ஜிதம் செய்யப்பட்டதால் மகஜர் மேல் நடவடிக்கை யெடுக்க அவசியமேற்படவில்லை.

திரு. பி. முருகையன் : தலைவர் அவர்களே, இந்தக் குளமானது கடைசிப் பகுதியில் வாய்க்காலாகப் பிரிந்து செல்கிறது. அணையின் ஆரம்பப் பகுதியில் வாய்க்காலிலிருந்து குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக வாய்க்காலை அகலப்படுத்த 120 அடி நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் கூறுவது போல் 120 அடியல்ல, 100 அடிதான்.